கோரப்பட்டிருக்கின்றன. அரசுக்கு முன்மொழிவுகள் வந்த பிறகு 1993—94-ஆம் ஆண்டில் இது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 259, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

259—

பழனி நகரில் மீன் விற்பனை நிலையம்.

*9683—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மீன் வளர்ச்சிக் கழகத்தின் (Tamil Nadu Fisheries Development Corporation) சார்பாக, பழனி நகரில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனியில் 1—2—1993 அன்று வினா தொடுத்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் மீன் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே பழனி நகரில் அரசு மீன் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக விற்பனை மையம் ஏற்படுத்தப்படுமா என்று கேட்ட எனக்கு, அந்த மையத்தை அங்கே ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமல்லாமல், எனக்கு அதை திறக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு மீன் வளர்ச்சித் துறை அமைச்சருக்கும் என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி, இப்பொழுது அங்கு உலர் மீன்கள் மட்டும்தான் விற்கப்படுகிறது. அங்கே வறுத்த மீனும் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழனி ஆண்டவரும் அங்கே இருக்கிறார். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆய்வில் எதிர்காலத்திலே கிட்டத் தட்ட இறைச்சி உண்ணுகின்ற வழக்கம் 45%-லிருந்து 5% ஆக குறையும் என்றும், அதே நேரத்தில் மீன் சாப்பிடுகின்ற வழக்கம் 5%-லிருந்து, 45% ஆக உயரும் என்றும் கூறியிருக் கின்றார்கள். காரணம் மீன் எளிமையான உணவும், அதே நேரத்தில் புரதச் சத்து நிறைந்த ஒரு முக்கியமான உணவு ஆகும். அதே நேரத்தில் செலினியம் என்று சொல்லக்கூடிய ரேர் மினரல் மீன்களில்தான் அதிகமாக இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ரேர் மினரல், கேன்ஸர் வராத அளவு ஒரு பாதுகாப்பை உடம்பிலே ஏற்படுத்துகின்றது. அந்த அடிப்படையிலே அரசு மீன் வறுவலை ஊக்குவிக்கும். அந்த அடிப்படையிலே தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மேலாளரை உறுப்பினர் அவர்கள் அணுகி அந்த அங்காடி யிலே மீன் வறுவலை வைக்க வேண்டுமென்று கேட்டால், நிச்சயம் அதற்கு அனுமதி அளிப்பார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மீன் சாப்பிடு வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி இங்கே விரிவாக எடுத் துரைத்திருக்கின்றார்கள். பழனி ஒரு டூரிஸ்ட் சென்டராக இருப்பதால் floating population அதிகமாக இருக்கிறது. அதன் அடிப்படையில்தான், நான் அந்தக் கருத்தை மனதில் கொண்டு, இதுபோன்ற இன்னொரு மையம் பழனியில் மற்றொரு பகுதியில் ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 260, திரு. எச்.எம். ராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.